சட்டத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு

2021 - 2022

மானியக் கோரிக்கை எண். 33

எஸ். ரகுபதி

சட்டத்துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

2021

கோரிக்கை எண், 33

சட்டத்துறை

2021–2022 ஆம் ஆண்டுக்கான கொள்கை

விளக்கக் குறிப்பு

வரிசை எண்	பொருள்	பக்க எண்
1.	முன்னுரை	1–6
2.	சட்டக் கல்வி	6–16
3.	தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்	17–22
4.	தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம்	22–26
5.	மாநில சட்ட ஆணையம்	27–30
6.	மாநில (சட்ட) ஆட்சி மொழி ஆணையம்	30–32
7.	சான்றுறுதி அலுவலர்கள்	32–33
8.	நீடித்த வளர்ச்சி இலக்கு	33–34

2021-2022 ஆம் ஆண்டிற்கான கொள்கை

விளக்கக் குறிப்பு

கோரிக்கை எண். 33 சட்டத்துறை

முன்னுரை

சட்டம் என்பது, நீதி வழுவா நெறிமுறையை நிலைநிறுத்துவதற்காக அரசினால் ஏற்பளிக்கப்பட்டு பயன்படுத்திவரும் கோட்பாடுகளின் தொகுப்பாகும். சட்டம் என்பது அரசின் அதிகாரத்தினைச் செலுத்துவதற்கான கருவியாக மட்டும் அமைவதில்லை, அது மக்களை விதிகளுக்கு கட்டுப்படாமல் தன்னிச்சையாக செயல்படுபவர்களிடமிருந்து பாதுகாக்கும் வழிமுறையாகவும் இருப்பதாகும். சட்டமும் அரசும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. அரசு சட்டத்தை உருவாக்கி அதனைச் செயல்திறப்படுத்துகிறது. அரசின் செயல்நிலையைக் கட்டுப்படுத்துவதும் சட்டமாகும். சட்டத்தை உருவாக்குபவர்கள் உள்ளடங்கலாக குடிமக்கள் ஒவ்வொருவரும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் ஆவர். சட்டமானது சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பயன்பட வேண்டுமானால், அது சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை

மேம்படுத்திக்கொள்வதுடன் அதன் வேகத்துடன் இணைந்து செல்லவும் வேண்டும். அண்மைக்காலங்களில் நிகழ்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிகள், சமுதாயத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கான முதன்மையான எடுத்துக்காட்டுகள் ஆகும். அவை புதிய சட்டங்களுக்கான தேவையை ஏற்படுத்துகின்றன.

சட்டத்தை உருவாக்கும் மூலங்களில் சட்டம் இயற்றல் என்பது, ஒரு முக்கியமான மூல ஆதாரம் ஆகும். 'Legislation' என்னும் ஆங்கிலச் சொல் 'legislatio' என்னும் இலத்தீன் மொழிச்சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் ஒரு சட்டத்தைக் கொண்டுவருதல் அல்லது முன்மொழிதல் என்பதாகும். சட்டமன்றத்தின் முதன்மையான பணியானது சட்டங்கள் இயற்றுவதாகும். சட்டத்துறையானது அரசு, சட்டங்களை இயற்றுவதற்கு உரிய வகையில் துணையாக நிற்கிறது.

இந்திய அரசமைப்பு நமது நாட்டின் உயர்ந்த சட்டமாக திகழ்கிறது. மாநில சட்டமன்றம், அரசமைப்பின் ஏழாம் இணைப்புப் பட்டியலில் உள்ள மாநிலப் பட்டியலிலும் ஒருங்கியல் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பொருள் எதனையும் குறித்து

சட்டமியற்றுகிறது. ஆனால் ஒருங்கியல்பட்டியலின் கீழ்வரும் பொருளைப் பொறுத்தவரை, மாநில சட்ட மன்றத்தினால் இயற்றப்படும் சட்டமானது பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட எத்தகைய சட்டத்திற்கும் அல்லது நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கும் முரணாக இருக்குமேயானால் அது குடியரசுத்தலைவரால் இசைவளிக்கப்பட்ட பின்பு சட்டமாகிறது. சட்ட மன்றத்தினால் நேரடியாக இயற்றப்படும் சட்டமானது, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் முக்கிய கொள்கைகளைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. சட்டத்தின் செயல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான தொழில்நுட்ப விவரங்களும், நெறிமுறைகளும் அடங்கிய நடவடிக்கைகளை குறித்துரைக்க நிருவாக அதிகார அமைப்புகளுக்கு ஒப்படைவு செய்யப்படுகிறது. இவை அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகளால் வகுக்கப்படும் விதிகள் என்று வழங்கப்படும். அவ்வாறு வகுக்கப்படும் விதிகள் அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகளால் இயற்றப்பட்டு, சட்டத்துறையினால் சுவர்ந்தாய்வு செய்யப்படுகின்றன. விதிகள் வகுக்கப்படுகையில், சட்டமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகள் ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்களை

மீறாதிருக்கின்றனவா என்பதை உறுதி செய்யும் பொருட்டு, சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டத்தின் வகைமுறைகளின்படி வெளியிடப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் அனைத்தும் சட்டமன்றத்தின் விதிகள் ஆய்வுக்குழுவினால் ஆய்வு செய்யப்படுகின்றது.

அரசின் கொள்கை முடிவைச் சட்டமாக்க வேண்டும் என்று முடிவு செய்யும் பட்சத்தில், சட்டத்துறை, தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கை முடிவுகளுக்கு சட்டவடிவமளித்து சட்ட முன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவிற்கு ஒப்புதல் அளித்த பின்பு, ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னர், அது சட்டமாகும் வரையில், சட்டத்துறையின் பணி தொடர்கிறது. சட்டமன்றப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும், சட்டமியற்றுவதற்கான அவசரத் தேவை ஏற்படுகிறவிடத்து, அரசமைப்பின் 213– ஆம் உறுப்பின்படி அவசரச் சட்டம் வெளியிடப்படுகிறது. சட்டத்துறையின் பணி, அவசரச்

சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப உருவாக்கி அதனை பிரகடனப்படுத்தி வெளியிடும் வரையில் தொடர்கிறது.

மேலும், சட்டத்துறையின் முக்கியப் பணியானது, சட்டப் பேரவைச் செயலகம் உள்ளடங்கலான தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் பிரச்சனை தொடர்பாக ஆலோசனை வழங்குவதாகும்.

மாநில அரசு ஒரு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத்துறையினால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன. இவை தவிர, மாநில அரசு ஒரு தரப்பினராக உள்ள ஆவணங்கள் அனைத்தையும் சட்டத்துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மேலும், பின்வருவன தொடர்பான நிருவாகப் பணிகளையும் சட்டத்துறை செய்து வருகிறது:–

- சட்டக் கல்வி
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்
- தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம்

- மாநில சட்ட ஆணையம்
- மாநில சட்ட (ஆட்சிமொழி) ஆணையம்
- சான்றுறுதி அலுவலர்கள்

சட்டக் கல்வி

சட்டக்கல்வித் துறையானது தமிழ்நாட்டில் 1953–ஆம் ஆண்டு சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை உருவாக்கப்பட்டதிலிருந்து, தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, மென்மேலும் முன்னேற்றமடைய, இத்துறை தொடர்ந்து முயன்று வருகிறது.

சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979–80–ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயமுத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996–97–ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஒரு அரசு சட்டக் கல்லூரி

தொடங்கப்பட்டது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரி, அரசு சட்டக் கல்லூரியாக டிசம்பர் 2006–இல் அறிவிக்கப்பட்டது. 2008–2009–ஆம் கல்வியாண்டில், வேலூரில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது.

நீதியரசர் திரு.ப.சண்முகம் விசாரணை ஆணையத்தின் பரிந்துரைக்கேற்ப, சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, உயர்நீதிமன்ற வளாகத்திலிருந்து, செங்கல்பட்டு மாவட்டம், புதுப்பாக்கம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூர் ஆகிய இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள வளாகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டம், புதுப்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள வளாகத்தில் 5 ஆண்டு சட்டப்படிப்பும், திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூரில் கட்டப்பட்டுள்ள வளாகத்தில் 3 ஆண்டு சட்டப்படிப்பு மற்றும் எல்.எல்.எம் படிப்புகளும் 2018–2019–ஆம் ஆண்டு முதல் நடத்தப்படுகிறது. தற்போது, மாநிலத்தில் பதினான்கு அரசு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

2021–2022 ஆவது கல்வியாண்டில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த மாணவர் இடங்களின் எண்ணிக்கை 13526. இவற்றில், கல்லூரி வாரியாக ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன:–

வ. எண்	**சட்டக் கல்லூரியின் பெயர்**	**மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை**
1,	சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர். (3 ஆண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப்படிப்புகள்)	**1123**
2,	சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம். (5 ஆண்டு இளங்கலை சட்டப்படிப்பு மற்றும் முதுகலை சட்டப்படிப்புகள்)	**1245**
3,	அரசு சட்டக் கல்லூரி, மதுரை. மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)	**1478**

4,	அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)	1480
5,	அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)	1480
6,	அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)	1440
7,	அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)	1080
8,	அரசு சட்டக் கல்லூரி, வேலூர். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப்படிப்புகள்)	680

9,	அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப்படிப்புகள்)	720
10,	அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப்படிப்புகள்)	680
11,	அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப்படிப்புகள்)	680
12,	அரசு சட்டக் கல்லூரி, சேலம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை சட்டப் படிப்பு)	480
13,	அரசு சட்டக் கல்லூரி, நாமக்கல். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை சட்டப் படிப்பு)	480
14,	அரசு சட்டக் கல்லூரி, தேனி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை சட்டப் படிப்பு)	480
மொத்தம்		13526

புதிதாக உருவாக்கப்பட்ட இராமநாதபுரம், சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய புதிய அரசு சட்டக் கல்லூரிகள் தவிர்த்து, ஏனைய அரசு சட்டக் கல்லூரிகள் அனைத்தும் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இராமநாதபுரம், சேலம் மற்றும் தேனி அரசு சட்டக் கல்லூரிகளுக்கான சொந்தக் கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் அரசு சட்டக் கல்லூரிக்கென நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.76.60 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. தேனி அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ. 89.01 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சேலம் அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.96.54 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நாமக்கல் அரசு சட்டக் கல்லூரிக்கென

சொந்தக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மற்றும் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரிகளில் போதிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகளை மேற்கொள்வதற்கென ரூ.10.89 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெரும்பாலான அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவ, மாணவியர் விடுதி வசதி உள்ளது. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூரிலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவியர் விடுதி மட்டும் உள்ளது. மேற்சொன்ன கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டுவதற்கென உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசு சட்டக்கல்லூரிகளில் நியமித்திட, 186 உதவிப் பேராசிரியர்களை தெரிவு செய்திடுமாறு ஆசிரியர் தேர்வு வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதுவரை 109 உதவிப் பேராசிரியர்கள் தெரிவு

செய்யப்பட்டு அரசு சட்டக் கல்லூரிகளில் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மீதமுள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு சட்டக் கல்லூரிகளில் பணியாற்றி வந்த பத்து இணைப் பேராசிரியர்களுக்கு 2020-2021-ஆம் கல்வியாண்டில் முதல்வர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டு, அரசு சட்டக் கல்லூரிகளில் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தற்போது 11 அரசு சட்டக் கல்லூரிகளில் 40 மாணவர் எண்ணிக்கையுடன் கூடிய பாடப்பிரிவுகளாக பல்வேறு பாடப்பிரிவுகளின் கீழ் முதுகலை சட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

அரசு சட்டக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் முதுகலை சட்டப் படிப்புகள்

(2020–2021)

வ. எண்	கல்லூரியின் பெயர்	எல்எல்.எம்., பாடப்பிரிவு
1.	சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப் பெரும்புதூர்.	(1) வணிகச் சட்டம். (2) குற்றவியல் சட்டம் மற்றும் குற்றவியல் நீதி நிருவாகம். (3) சொத்துரிமைச் சட்டம். (4) தொழிலாளர் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம்.
2.	சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம்.	சுற்றுச்சூழல், ஆற்றல் மற்றும் காலநிலை மாற்றச் சட்டங்கள்.
3.	அரசு சட்டக் கல்லூரி, மதுரை.	(1) சொத்துரிமைச் சட்டம். (2) சர்வதேச சட்டம் மற்றும் நீதி.
4.	அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.	(1) தொழிலாளர் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம். (2) அறிவுசார் சொத்துரிமைச் சட்டங்கள்.
5.	அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர்.	(1) வணிகச் சட்டம். (2) வரிச் சட்டங்கள்.

6.	அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி.	அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மனித உரிமைகள்.
7.	அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு.	குற்றவியல் மற்றும் இணைய குற்றச் சட்டம்.
8.	அரசு சட்டக் கல்லூரி, வேலூர்.	அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம்.
9.	அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம்.	(1) தகவல் தொழில் நுட்ப சட்டம் மற்றும் இணைய பாதுகாப்பு சட்டங்கள். (2) குடும்பச் சட்டங்கள்.
10.	அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி.	பெரு நிறுவன நிருவாகச் சட்டங்கள் மற்றும் நிதி.
11.	அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம்.	அரசியலமைப்புச் சட்டம் மற்றம் நிருவாகச் சட்டம்.

அரசு சட்டக் கல்லூரிகளில் இளங்கலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

சர்வதேச அளவிலான மாதிரி நீதிமன்ற போட்டிகளில் 2021–2022–ஆம் கல்வியாண்டு முதல் கலந்து கொள்ள, மாணவர்களை தெரிவு செய்திட

மொத்தமுள்ள 14 அரசு சட்டக் கல்லூரிகளிலும் மாதிரி நீதிமன்றப் போட்டிகள் நடத்துவதற்கென ஆண்டு தோறும் ரூ.70 இலட்சம் ஒப்பளிப்பு செய்திட நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களிலுள்ள 7 அரசு சட்டக் கல்லூரிகளிலும் தமிழ் வழியில் சட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழ் மொழி வாயிலாக சட்டப்படிப்புகள் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் தலா ரூ.400/– வீதம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

திருவள்ளூர், செங்கல்பட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு சட்டக்கல்லூரிகளில் மாணவர்களின் நலனுக்காக புத்தக வங்கித் திட்டம் உள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

சட்டக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலமாக, சட்டம் பயிலும் மாணவர்கள் இன்றைய போட்டிகள் நிறைந்த உலகில் வேரூன்றி நிற்பதற்காக சட்டக் கல்விக்கென தமிழ்நாட்டில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மாநிலச் சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டது. மேலும், தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாக இது திகழ்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளையும் தன்னகத்தே ஒருங்கிணைத்து செயற்பட்டு வருவதால் சட்டக் கல்வியின் தரம் மேம்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தற்போது பெருங்குடி, கொட்டிவாக்கம் கிராமத்தில் தரமணி இருப்புப்பாதை நிலையத்திற்கு மிக அருகில் 15 ஏக்கர் நிலத்தில், ரூ.61.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், இப்பல்கலைக்கழக விரிவாக்கப் பணிகளுக்காக

கூடுதலாக 10 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சட்டக் கல்வி பயிற்றுவிக்கும் பணியை, சீர்மிகு சட்டப்பள்ளி வாயிலாக துவக்கி, மூன்றாண்டு எல்.எல்.பி (ஹானர்ஸ்) சட்டப்படிப்பு மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த பி.ஏ.,எல்.எல்.பி (ஹானர்ஸ்), பி.காம்.,எல்.எல்.பி (ஹானர்ஸ்), பி.பி.ஏ.,எல்.எல்.பி (ஹானர்ஸ்) மற்றும் பி.சி.ஏ.,எல்.எல்.பி (ஹானர்ஸ்) ஆகிய இளங்கலை சட்டப்படிப்புகளில் மொத்தம் 3479 மாணவர்கள் பயின்று வருகின்றனர். மேலும், இப்பல்கலைக்கழகம் முதுகலை சட்டப்படிப்பு மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகளையும் பயிற்றுவித்து வருகிறது. தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக பல்வேறு முதுகலை பட்டயப்படிப்புகள் மற்றும் சான்றிதழ் படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் சீர்மிகு சட்டப்பள்ளியில் இளங்கலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து வகையிலும் ஒரு முன்னுதாரணமாகத் திகழும் இப்பல்கலைக்கழகம் அதன் சீர்மிகு சட்டப்பள்ளி மூலம் இதுவரை 91 ஆராய்ச்சி மாணவர்களுக்கு சட்ட முனைவர் பட்டத்தினை வழங்கியுள்ளது. தற்போது 34 மாணவர்கள் முழு நேர அடிப்படையிலும், 122 மாணவர்கள் பகுதிநேர அடிப்படையிலும் முனைவர் ஆராய்ச்சி படிப்பினை இப்பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுமக்களுக்கு சட்ட அறிவினை ஏற்படுத்துவதற்காக, போதுமான உட்கட்டமைப்புடன் கூடிய சட்ட அறிவு செயல் முறை மையம் ஒன்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகிறது. குற்றவியல் சட்டப்பாடம் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம், தடயவியல் ஆய்வுக்கூடம் ஒன்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் கீழ்க்காணும் தேசிய மற்றும்

சர்வதேச பல்கலைக் கழகங்களுடனும், நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, கல்வி, பயிற்சி, சட்டம், நீதி, சமூக முன்னேற்றம் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பாடங்களில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் ஆய்வு செய்வதன் மூலமாக தன்னுடைய செயல்பாடுகளை விரிவாக்கம் செய்கிறது.

(1) மகாராஷ்டிரா தேசிய சட்டப் பல்கலைக்கழகம், அவுரங்காபாத்;

(2) தி சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிட்டெட், மும்பை;

(3) மகாராஷ்டிரா தேசிய சட்டப் பல்கலைக்கழகம், மும்பை;

(4) டாடா இன்ஸ்டிடியூட் ஆப் சோசியல் சைன்சஸ், மும்பை;

(5) ஏ.ஐ.ஆர் லாவா அகாடமி & ரிசர்ச் சென்டர், நாக்பூர் (ஏ.எல்.ஏ.ஆர்.சி);

(6) டிரான்ஸ்கிரிப்ட்ஸ் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஐஐடிமெட்ராஸ் ரிசர்ச் பார்க், தரமணி, சென்னை; மற்றும்

(7) கன்சோர்டியம் பார் எஜீகேசனல் கம்யூனிகேசன், புது டெல்லி.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், பெருங்குடி வளாகத்தில் "அனைத்திந்திய செய்தியாளர் (AIR) சட்டக்கல்வி உதவித் தொகுதி" என்ற திட்டத்தை நிறுவியுள்ளது. சட்ட மாணவர்களுக்கு சிறந்த சட்டக் கல்விப் பயிற்சியை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், இப்பல்கலைக்கழகம் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றுள்ள சட்டக்கல்லூரிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் தங்களது தொழில் தரத்தில் மேன்மை பெற, மாற்றுப் பூசல் தீர்வு முறையை மேம்படுத்த, சட்டம் சார்ந்த பயிற்சியளித்தல் மற்றும் பிற திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அரசு சட்டக் கல்லூரிகள், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளி மற்றும் தனியார் சுயநிதி சட்டக் கல்லூரிகளின் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான மாணவர் சேர்க்கை நடைமுறைகள், கலந்தாய்வு உட்பட அனைத்தும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால், இணைய வழியாக,

http://www.tndalu.ac.in எனும் வலைதளம் மூலம் 2021–2022 ஆம் கல்வியாண்டு முதல் நடைபெறுகிறது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

தமிழ்நாட்டில், தேசிய அளவிலான மிகச் சிறந்த சட்டக்கல்வி வழங்கும் பொருட்டு, 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியை மாநிலச் சட்டம் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் 25 ஏக்கர் வளாகத்தில், 79.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் உலகளாவிய காட்சியில் ஏற்பட்டு வரும் சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப, சட்டம் பற்றிய அறிவு மற்றும் கற்றல், சட்ட செயல்முறைகள், பரிந்து பேசுதல் (வக்காலத்து) மற்றும் நீதி நிருவாகத் திறன் ஆகியவற்றை பரப்புவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டு பி.ஏ.,எல்.எல்.பி (ஹானர்ஸ்), ஐந்தாண்டு பி.காம்., எல்.எல்.பி (ஹானர்ஸ்) மற்றும் எல்.எல்.எம் மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட 138 இடங்களுடன் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாணவர்கள் சேர்க்கையானது பொதுவான சட்டப் படிப்பு நுழைவுத் தேர்வு (Common Law Admission Test – CLAT) மூலம் நடைபெறுகிறது.

2020–2021–ஆம் கல்வியாண்டில் மேற்சொன்ன சட்டப் படிப்புகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு :–

வ. எண்	படிப்பு	சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	
(1)	பி.ஏ., எல்.எல்.பி (ஹானர்ஸ்)	தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள்	25
		அகில இந்திய அடிப்படையில்	37
		அயல்நாடு வாழ் இந்தியர்கள்	00
		மொத்தம்	**62**

(2)	பி.காம்., எல்.எல்.பி (ஹானர்ஸ்)	தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள்	35
		அகில இந்திய அடிப்படையில்	19
		அயல்நாடு வாழ் இந்தியர்கள்	00
		மொத்தம்	**54**
(3)	எல்.எல்.எம்	தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள்	07
		அகில இந்திய அடிப்படையில்	08
		அயல்நாடு வாழ் இந்தியர்கள்	00
		மொத்தம்	**15**
		மாணவர்களின் மொத்த எண்ணிக்கை	**131**

இப்பல்கலைக்கழகத்தில், தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்களுக்கென ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள இடங்கள், தமிழ்நாடு மாநில இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி நிரப்பப்படுகின்றன.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் சட்ட வரலாற்று அருங்காட்சியகத்தினை விரிவாக்கம் செய்திடும் பொருட்டு, தாமிரப் பட்டயங்கள் மற்றும் மாதிரிகள் (Copper reliefs and Models) வாங்குதல் மற்றும் ஆவணங்களை எண்மப்படுத்துதல் (Digitalization), அதனைப் பதிவு செய்தல் (Registration), காப்பீடு செய்தல் (Insurance) அவற்றினைப் பாதுகாத்திடும் பணிகளுக்கென ரூ.20 இலட்சங்கள் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

மேலும் இப்பல்கலைக்கழகத்தில், மகளிர் நலச் சட்ட மையம் மற்றும் தென்னிந்திய சட்ட வரலாற்று மையம் ஆகியவற்றைப் புதிதாக நிறுவுவதற்கென ரூ.11.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகம் கீழ்க்காணும் பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ளது :–

(1) தேசிய சட்டப் பல்கலைக்கழகம், புது டெல்லி;

(2) இந்திய பல்கலைக்கழக தேசிய சட்டப் பள்ளி, பெங்களூரு;

(3) இன்ஸ்டிடியூட் ஆப் இந்திய கம்பெனி செகரட்டரீஸ் அமைப்பு, புது டெல்லி;

(4) இந்திய பன்னாட்டு மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மை அமைப்பு, புது டெல்லி; மற்றும்

(5) தேசிய தொழில் நுட்ப அமைப்பு, திருச்சிராப்பள்ளி.

மேலும், தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் கீழ்க்காணும் கூட்டமைப்புகளில் உறுப்பினராக உள்ளது :—

(1) இந்திய பல்கலைக்கழக கூட்டமைப்பு, புது டெல்லி;

(2) இந்திய சமூக அறிவியல் கழகம், அலகாபாத்;

(3) சாஸ்திரி இந்தோ – கனடியன் அமைப்பு, புது டெல்லி;

(4) ஆசிய சட்ட அமைப்பு, சிங்கப்பூர்; மற்றும்

(5) நூலக மேம்பாட்டு இணைவமைவு (DELNET), புது டெல்லி.

மாநில சட்ட ஆணையம்

மாநில சட்ட ஆணையம், உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு. சொக்கலிங்கம் நாகப்பன் அவர்கள் தலைமையில் 15.06.2017 அன்று மீள அமைக்கப்பட்டது. அவ்வாறு மீள அமைக்கப்பட்ட மாநிலச் சட்ட ஆணையத்தின் பதவிக்காலம் அதன் தலைவர் பதவியேற்ற நாளிலிருந்து 3 ஆண்டுகள் ஆகும். மாநிலச் சட்ட ஆணையத்தின் தலைவர், 19.06.2017 அன்று பதவியேற்றார். மாநிலச் சட்ட ஆணையத்தின் தலைவர் பதவிக்காலமானது 18.06.2020 அன்றுடன் நிறைவுற்ற நிலையில் அரசானது மேற்சொன்ன சட்ட ஆணையத்தின் பதவிக்காலத்தினை 19.06.2020–லிருந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

மாநிலச் சட்ட ஆணையத்தின் செயற்பணிகளானது ஆங்கிலேய ஆட்சியின் போது இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் மற்றும் அதற்குப் பின்பு இயற்றப்பட்ட சட்டங்களையும் ஆய்வு

செய்வதாகும் மற்றும் ஆணையத்தால் ஆய்வு செய்யப்பட்ட அந்த சட்டங்கள் இன்றைய சூழ்நிலைக்குப் பொருந்தத்தக்கனவாக உள்ளனவா அல்லது இல்லையா என்பது பற்றியும் தனது கருத்தினை அளிக்கும். மேலும், அந்தச் சட்டங்களுக்கு இணங்கிய வகையில் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை அரசுக்கு வழங்கும்.

உச்சநீதிமன்றத்தின் மற்றும் உயர்நீதிமன்றத்தின் பல்வேறு முடிவுகளுடன் மேற்சொன்ன சட்டங்கள் உடன்பட்டிருக்கிறதா என்பது பற்றியும் சட்ட ஆணையம் ஆய்வு செய்து மற்றும் அந்தச் சட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றியும் அரசுக்கு அறிவுறுத்தும். மேலும்,–

(அ) தற்போதுள்ள சட்டங்களில் உள்ள குறைகளை நீக்குவதற்கு பொருந்தத்தக்க மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை வழங்கும்;

(ஆ) பொருந்தத்தக்கதாகவுள்ள சமூக, பொருளாதார, சட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனையை வழங்கும்;

(இ) மாநிலங்களுக்கிடையேயான உறவுகளை மற்றும் மைய–மாநில உறவுகளுக்கான வழிவகைகள் பற்றிய ஆலோசனையை வழங்கும்;

(ஈ) நீதி நிருவாகச் சீர்திருத்தங்கள் அடிப்படையிலான சிறந்த மற்றும் உகந்த நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்கும் மற்றும் பரிந்துரைகளைச் செய்யும்; மற்றும்

(உ) மாநிலச் சட்டங்களுக்கு மட்டுமில்லாமல் இந்த மாநிலத்திற்கு பொருந்தும் வகையில் மையச் சட்டங்களுக்கும் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை வழங்கும்.

மேலும், 10.07.2017 அன்று நடைபெற்ற தலைமைச் செயலாளர்களின் தேசிய மாநாட்டில், சிறந்த நிர்வாகத்திற்கு, நிதி ஆயோக் பரிந்துரையின் அடிப்படையில் இவ்வரசால், "தமிழ்நாட்டில் உள்ள சட்டங்களை பகுத்தல்" என்ற பொருளை மாநிலச் சட்ட ஆணையத்திற்கு குறிப்பிட்டு, ஆணையத்தின் ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் வழங்குமாறு 21.09.2017–ஆம் நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளது.

அதற்கேற்ப, தற்போதைய ஆணையம் இதுவரை 42 அறிக்கைகளை (13–வது அறிக்கை முதல் 54–வது அறிக்கை வரை) அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கைகளில், ஆணையமானது,–

(i) 157 முதன்மைச் சட்டங்கள் மற்றும் 1138 திருத்தச் சட்டங்களை நீக்கறவு செய்யவும்;

(ii) 13 சட்டங்களுக்கு திருத்தங்கள் செய்யவும்; மற்றும்

(iii) 2 புதிய சட்டங்களை இயற்றவும் பரிந்துரை செய்துள்ளது.

மாநில சட்ட ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் இதுவரை 243 சட்டங்களை மாநில அரசு நீக்கறவு செய்துள்ளது.

மாநிலச் (சட்ட) ஆட்சிமொழி ஆணையம்

மாநிலச் (சட்ட) ஆட்சிமொழி ஆணையம் சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு பொன். கலையரசன் அவர்கள் தலைமையில் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது. மாநிலச் (சட்ட) ஆட்சி மொழி ஆணையத்தின் பதவிக்காலம் அதன் தலைவர்

பொறுப்பேற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகும். மாநிலச் (சட்ட) ஆட்சிமொழி ஆணையத்தின் தலைவர் 2018 டிசம்பர் திங்கள் 7–ஆம் நாள் அன்று பதவியேற்றுக் கொண்டார்.

மாநிலச் (சட்ட) ஆட்சிமொழி ஆணையத்தின் பணிகளானது,:–

(i) தமிழில், சட்ட சொற்களுக்கான ஒரு சட்ட சொற்களஞ்சியம் (Law Lexicon) தயாரித்து அச்சிடுவது;

(ii) மாநிலச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் மற்றும் அதன் கீழ்வகுக்கப்பட்ட விதிகளைத் தமிழில் மொழிபெயர்த்தல்;

(iii) மத்திய அரசின் சட்டங்கள், அவசரச் சட்டங்கள், அதன் கீழ்வகுக்கப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் பிற அறிக்கைகளை மொழிபெயர்த்தல்;

(iv) மாநில அரசால் சட்ட ஆட்சிமொழி ஆணையத்திற்கு அவ்வப்போது அளிக்கப்படும் பிற பணிகளைச் செய்தல்.

மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் இதுவரை 41 மத்திய சட்டங்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளது. மேலும் இவ்வாணையமானது சட்ட சொற்களஞ்சியம் (Law Lexicon) தயார்

செய்யும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. ஆங்கில அகர வரிசை 'K' வரை 12,000–ற்கும் மேற்பட்ட சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மேற்படி ஆணையமானது, இந்திய அரசியலமைப்பின் 2021 ஜனவரி 31–ஆம் தேதி வரையிலான திருத்தங்களை உள்ளடக்கிய திருத்தப்பட்ட (நான்காவது) மறுபதிப்பினை இருமொழி (ஆங்கிலம் மற்றும் தமிழ்) வடிவத்தில் வெளியிட்டுள்ளது.

சான்றுறுதி அலுவலர்கள்

1952–ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி (மையச் சட்ட எண் 53/1952) பொதுவான வணிக நடைமுறையில் முறையாவணங்களைக் குறித்தல் மற்றும் சான்றிடுதல் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். 29.01.2021 அன்று உள்ளபடி இந்த அரசால் சான்றுறுதி அலுவலர்களாக அமர்த்தப்பட்டு இம்மாநிலத்தில் செயல்படுபவர்களின் எண்ணிக்கை 2485 ஆகும்.

சான்றுறுதி அலுவலரின் நியமனம், தொழிற் சான்றிதழ் புதுப்பித்தல், தொழிலாற்றும் இடத்தின் விரிவாக்கம், தொழிற் சான்றிதழுக்கான நகல் வழங்குவதற்கான விண்ணப்பத்தினையும் மற்றும் ஆண்டு விவர அறிக்கையினை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக "tnnotary.tn.gov.in" என்ற இணையதள முகவரி 23.02.2021 அன்று தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்கு

நீடித்த வளர்ச்சி என்பது எதிர்கால தலைமுறையினரின் சொந்த தேவைகளை மேற்கொள்வதற்கான திறன்களை பாதிக்காதவண்ணம் தற்போதுள்ள தலைமுறையினரின் தேவைகளை மேற்கொள்ளும் வளர்ச்சியாகும். 17 இலக்குகளையும், 169 குறிக்கோள்களையும் கொண்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்கானது ஐக்கிய நாடுகள் சபையில் முன்மொழியப்பட்டு 193 உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்துறையின் கீழ் இயங்கி வரும் கல்வி நிறுவனங்களில் சட்டம் தொடர்பான கல்வியை வழங்குவதன் வாயிலாக நீடித்த வளர்ச்சி

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம்

மாதிரி நீதிமன்றக் கூடம், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம்

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி

அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர்